# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 90 — 1973 දෙසැම්බර් 14 වැනි සිකුරාදා — 1973.12.14

90 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... | ... 1331 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | ... 1347 |

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். " இலங்கையர் " என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்திவைக்கப்பட்ட " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆடு திசெம்பர் மீ 15 ந் வ.*

---

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதி களுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோ கத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தி யோகத்தர் (பிணைக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோ கத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந் தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின் வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக் குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத் தில் காரணம் ஏதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

1 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங் கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக் கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படு வர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற் றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்து வதிலும் இரண்டு வருடத்தினுள் இரண் டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய் வதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தி யுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடு கள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங் கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத் திறனை அடையாவிட்டால் தாபனக் கோவை யின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப் படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவி யொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய் யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவி யொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல் பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண் டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத் திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய் வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்ப தனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர் கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட் படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலா யினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலா யினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறு தியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்த லாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங் கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய் வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர் கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்ப தற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தி யோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண் டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

## 7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## 8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

### கமத்தொழிற்றிணைக்களம்

*செயற்கைமுறை விந்துச் சேர்க்கை உத்தியோகத்தர் பதவி*

கமத்தொழிற்றிணைக்கள செயற்கைமுறை விந்துச் சேர்க்கை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலுடன் சேர்க்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு செயலாளர், விவசாய காணி அமைச்சு இல. 315, வக்சோல் வீதி, தபால் பெட்டி 569, கொழும்பு 2 க்கு பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் 04 ந் திகதி ஜனவரி மாதம், 1974

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 11 ந் திகதி ஜனவரி மாதம் 1974.

குறிப்பு.—(i) சேர்க்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தை ஒத்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பம் அல்லது அது சார்பான கடிதம் தபாலில் தாமதமாகியது அல்லது தொலைந்துவிட்டது என்ற குற்றச்சாட்டுக்கள் கவனிக்கப்படமாட்டா. கடைசிவரை விண்ணப்பத்தைத் தாமதிப்பவர்கள் தங்களது நட்டத்திலேயே அதனை மேற்கொள்ள வேண்டும்.

(iii) செயலாளர், விவசாய காணி அமைச்சு, இலங்கைக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்காக வெளிநாடுகளில் உள்ள அபேட்சகர்கள் விண்ணப்பங்களைக் குறித்த காலத்துள் தாங்கள் விரும்பின், இலங்கை வெளிநாட்டுத் தூதுவர் காரியாலயத்திற்கு அல்லது தாம் வசிக்கும் நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்பவேண்டும்.

(iv) **வைத்தியப் பரீட்சையும் பிரயாணச் செலவும்.**—இலங்கை அரசாங்க உத்தியோக நியமனத்திற்கு வெளிநாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்படுவோர் சேவைக்குத் தக்க உடலுறுதி உள்ளவரா என்பதை உறுதிப்படுத்த உறுதிப்படுத்தப்பட்ட வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இவ்வாறான பரீட்சைக்கும் பிரயாணச் செலவிற்குமான செலவை உத்தியோகத்தர்களே பொறுப்பேற்க வேண்டும்.

2. *வேலைக்கமர்த்தல் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.*—

பதவி நிரந்தரமானது. பொ. சே. சகாய நிதியத்திற்கு பணம் செலுத்த வேண்டும். முதற்கண் நியமனம் 3 வருட காலத்திற்கு பரீட்சார்த்தமானதாக விளங்கும்.

3. *வேதனமும் படியும்.*—

பதவிக்கான திரட்டிய வேதனம் பின்வருமாறு :—

சம்பளம் வருடாந்தம் ரூபா 7,800/- ல் தொடங்கி ரூபா 360/- வருடாந்த ஏற்றத்தைக் கொண்ட 9 ஏற்றங்களும் ரூபா 480/- வருடாந்தமாகக் கொண்ட 11 ஏற்றங்களும் கொண்ட ரூபா 16,320/- வரை செல்லும். (வினைத்திறமை கொண்டு ரூபா 16,320/- வரை செல்லும். (வினைத்திறமை முன் நடைமுறைக்கு வரும்)

குறிப்பு.—தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் விந்தைக் கையாளுதல், பதனிடல், தேக்கிவைத்தல் ஆகியவற்றில் நவீன நுட்ப இயல்களைப்பற்றி முற்றாக அறிவு பெற்றிருந்தால் மட்டுமன்றி ரூபா 11,040/- க்கு அப்பால் செல்ல உரித்துடையவராகார்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு அபேசகரும் திருப்திகரமான அத்தாட்சிகளைக் கொடுக்க வேண்டும். அவர் :—

(அ) தேக உறுதியும் நன்நடத்தையும் உடையவர்

(ஆ) 1974.01.04 ல் 30 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருப்பவர். (பொது சேவையில் ஏற்கெனவே உள்ளவர்களுக்கு இவ் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது).

(இ) (i) பின்வரும் தகைமைகளில் ஒன்றை அதற்கு மேற்பட்டதான தகைமைகளைக் கொண்டுள்ளவர் :—

(1) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(2) பம்பாய் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டம் (மிருக வைத்தியம்).

(3) சென்னைப் பல்கலைக்கழக மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(4) பஞ்சாப் பல்கலைக்கழக மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(5) ஒஸ்மானியா பல்கலைக்கழக மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(6) சங்கர் பல்கலைக்கழக மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(7) கல்கத்தா பல்கலைக்கழக மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(8) ஆக்ரா பல்கலைக்கழக மிருக வைத்திய விஞ்ஞானப் பட்டம்.

(9) பிகார் பல்கலைக்கழக மிருகவைத்திய மிருகவளர்ப்பு விஞ்ஞானப் பட்டம்.

(10) கொஹாற்றி பல்கலைக்கழக மிருகவைத்திய மிருக வளர்ப்பு விஞ்ஞானப் பட்டம்.

(11) இராஜ்புத்தானு பல்கலைக்கழக மிருகவைத்திய மிருக வளர்ப்பு விஞ்ஞானப் பட்டம்.

(12) பம்பாய் மிருகவைத்திய கல்லூரிப் பட்டதாரி.

(13) சென்னை மிருகவைத்திய கல்லூரிப் பட்டதாரி.

(14) வங்காளம் மிருகவைத்திய கல்லூரிப் பட்டதாரி.

(15) பஞ்சாப் மிருகவைத்திய கல்லூரிப் பட்டதாரி.

(16) பிகார் மிருகவைத்திய கல்லூரிப் பட்டதாரி.

(17) அனுமதிப்பத்திரம் பெற்ற மிருக வைத்தியம் செய்பவர் (பஞ்சாப்).

(18) மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டதாரி (வங்காளம்)

(19) டக்கா கிழக்கு பாகிஸ்தான் மிருக வைத்தியக் கல்லூரி மிருக வைத்திய அறுவை வைத்திய டிப்புளமா.

(20) இலண்டன் மிருக அறுவை வைத்திய றோயல் கல்லூரி உறுப்பினர்.

(21) காமன்வெல்த் நாட்டைச் சார்ந்த ஏதாவது தேசத்தின் மிருக வைத்திய கலாநிதிப் பட்டம் அல்லது மிருகவைத்திய விஞ்ஞானப் பட்டம் (மேற் சொன்னவை அல்லது ஐக்கிய நாடுகள் தவிர்ந்தவை).

(22) ஐக்கிய அமெரிக்காவில் அல்லது பிலிப்பைன்ஸில் உள்ள மதிக்கப்பட்ட மிருகவைத்திய கலாநிதிப் பட்டம்.

(23) கிழக்குப் பாகிஸ்தான் விவசாயப் பல்கலைக்கழகத்தின் மிருகவைத்திய விஞ்ஞான அனுமதிப் பத்திரம் பெற்றவர்.

(24) விஞ்ஞானப் பட்டதாரி (மிருக வளர்ப்பு) டக்கா பல்கலைக்கழகம் கிழக்குப் பாகிஸ்தான்,
உம்

(இ) (ii) செயற்கைமுறை விந்துசேர்க்கையில் ஐந்து வருட அனுபவம் பெற்றவர்.

5. வேண்டப்படும்பொழுது அபேட்சகர் எல்லா அல்லது எந்தவொரு சாதனத்தையும் சமர்ப்பிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (குறிப்பு.—ஞானத்தீட்சைப் பத்திரமோ அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் தேவைக்காக வழங்கப்படும் பிறப்புப் பத்திரமோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ஆ) பட்டப் பத்திரம் அல்லது உயர்கல்விச் சான்றிதழ்.

(இ) இரண்டு நற்சான்றிதழ்கள், இதில் ஒன்று படிப்பகப் பணிப்பாளர் கல்லூரிப் போதனாசிரியர் அல்லது போராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கவேண்டும்.

(ஈ) தொழிற் பத்திரமும்/அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் உம்

(உ) சிங்களமொழியில் சிரேஷ்ட உயர் பரீட்சைப் பத்திரம்.

குறிப்பு

(i) விண்ணப்பப் பத்திரத்துடன் சாதனங்களையோ அல்லது சாதனங்களின் பிரதிகளையோ இணைத்து அனுப்புதலாகாது.

(ii) கேட்கப்படும்பொழுது சாதனங்களைச் சமர்ப்பிக்காத அபேட்சகர்களின் விண்ணப்பம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

6. பொதுசேவையில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பம் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படவேண்டும். ஆயினும் அவர்கள், அவர்களது விண்ணப்பம் அனுப்பப்பட்ட திகதியை செயலாளர், விவசாய, காணி அமைச்சுக்கு விண்ணப்ப முடிவுத் தினத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ தெரியப்படுத்த வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அது சம்பந்தமான தொடர்புகளும் செயலாளர், விவசாய, காணி அமைச்சுக்கு விலாசமிடப்படவேண்டும். இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருடனும் தனிப்பட்ட தொடர்பு கொள்ளக்கூடாது.

8. இவ் வர்த்தமானியின் பகுதி I பிரிவு (II அ) ல் காணப்படும் பொதுசேவை பதவிகள் நியமனங்களுக்கான பொது நிபந்தனைகளைக் கவனத்திற் கொள்ளவும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் ஒப்புக்கொண்டமை பற்றிய கடிதம் கிடைக்காவிடின் அதனை உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டுவரவும்.

ஏ. ரி. எம். சில்வா,
செயலாளர்,
விவசாய, காணி அமைச்சு.

விவசாய, காணி அமைச்சு,
315, வொக்சோல் வீதி,
த. பெ. 569,
கொழும்பு 2,
1973, டிசெம்பர், 04 திகதி.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

கமத்தொழிற்றிணைக்களம்

### செயற்கைமுறைச் விந்துச் சேர்க்கை உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

(இவ் விண்ணப்பத்துடன் சாதனங்கள் இணைக்கப்படக்கூடாது)

1. முழுப் பெயர் (தனி எழுத்தில்) :————.

2. தபால் விலாசம் (ஏதாவது விலாச மாற்றங்கள் உடனடியாகத் தெரியப் படுத்தப்படவேண்டும்) :————.

3. (அ) பிறந்த திகதி :—.
வருடம்————, மாதம்————, நாள்————.
(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியில் சரியான வயது :—.
வருடம்———, மாதம்———, நாள்———.

4. நீங்கள் இலங்கைப் பிரசையா ? வம்சாவழியாகவா அல்லது பதிவுவழியாகவா எனக் கூறுக. பதிவுவழி இலங்கைப் பிரசையானல் உசாவு இலக்கத்தையும் உமக்கு வழங்கப்பட்ட பிரசா உரிமைப் பத்திர திகதியையும் தருக : ————.

5. பிறப்பு இடம் :—.
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் பாட்டனுர் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் பூட்டன் :————.

விண்ணப்பதாரி இலங்கையில் பிறந்திருந்தால் (ஆ) வை அல்லது (இ) (ஈ) யையும், நிரப்புவதுடன் (அ) வையும் நிரப்பவேண்டும். அவர் இலங்கயில் பிறக்காதிருப்பின் (அ) வை நிரப்புவதுடன் (ஆ) (இ) யை அல்லது (உ) (ஈ) யை நிரப்புதல் வேண்டும்.

6. (அ) பால் :————.
(ஆ) விவாகமானவரா, தனியானவரா, அல்லது மணவிலக்குப் பெற்றவரா எனக் கூறுக :————.

7. சிரேஷ்ட உயர் பரீட்சை :—.
(1) சிங்களம் :————.
(2) தமிழ் :————.
(3) ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து கல்விகற்ற பாடசாலைகள், கல்லூரிகள் நிறுவனங்கள் :————.

| பொதுக் கல்வி | | உயர்தொழிற் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் வரை | நிறுவனம் | தொடக்கம் வரை |
| 1. | | | |
| 2. | | | |

9. விளையாட்டு ஈடுபாடு பற்றிய விபரங்கள் பெற்றுக்கொண்ட கீர்த்திகள், இவ் வட்டத்தில் பெற்ற பொறுப்புள்ள பதவிகள் :————.

10. நீங்கள் பணமுட்டுக்களில் இருந்து நீங்கியவரா ? அப்படி இல்லையாயின் எவ்வளவு தூரம் பணமுட்டு உள்ளது : ————.

11. குற்றவியல் குற்றத்திற்காக சட்டமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா? அப்படியாயின் வழக்கின் விபரங்களை இலக்கம் உட்படக் கூறுக :————.

12. கல்லூரி உயர் தொழில்நுட்பத் தகைமைகள் (எல்லாப் பட்டங்கள் கீர்த்திகள் உயர் தொழில் உம்/அல்லது தொழில் நுட்பத் தொடர்பான தகைமைகள் பற்றிய விபரங்களை பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள், திகதிகள் ஏதாவது தரம் பெற்றிருப்பின் தரம் ஆகியவற்றுடன் தயவு செய்து தருக) :————.

13. தற்போதய தொழிலும் முன்னர் ஏதாவது நியமனம் பெற்றிருப்பின் அதனையும் தருக. (அமர்த்தப்பட்ட திகதியும் விலகிய திகதியும் கடைசியாகப் பெற்ற வருடாந்த வேதனமும் காட்டப்படவேண்டும்) :————.

| பதவிப் பெயர் | தொடக்கம் | வரை | வருடாந்த வேதனம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

**முக்கியமானது.**—அரசாங்க வேலை முடிவடையச் செய்யப்பட்டிருப்பின் அதற்கான காரணத்தை கீழ் உள்ள 15 வது பந்தியில் காட்டுக.

14. விசேட தகைமைகள் (உங்களிடம் விசேட தகைமைகள் உண்டா? உம்/அல்லது அறிவித்தலில் சேர்க்கப்பட்ட குறித்த அனுபவம் உண்டா? அப்படியானால் திகதிகள் உட்பட முழு விபரங்களையும் தருக. வர்த்தமானி அறிவித்தலில் ஏதாவது விசேட தேவைகள் குறிக்கப்பட்டிருப்பின் அதனைத் தயவுசெய்து கவனிக்கவும்) ————.

15. வேறு விபரங்கள் :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மையானவை சரியானவை என இத்தால் நான் உறுதிப்படுத்துகிறேன். இதில் பொதிந்துள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானவை, பிழையானவை எனக் காணப்படின் தெரிவிற்கு முன் நான் தகைமை இழக்கவும், தெரிவுக்குப் பின் சரியின்மை கண்டுபிடிக்கப்படின் நட்டஈடின்றி வேலையிலிருந்து நீக்கப்படவும் கூடும் என நான் அறிந்துள்ளேன்.

————,
திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

அபேட்சகர் அரச சேவையிலிருப்பின் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

————,
திகதி :————. திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

12-460—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## ஸ்ரீ லங்கா கடற்படை

### புனைகையர் தவிர்ந்த கிளைகளில் மாலுமிகளைச் சேர்த்தல்

ஸ்ரீ லங்கா கடற்படையின் நிரந்தர கடற்படையில் புனைகையர் தவிர்ந்த கிளைகளுக்கு கடலோடிகளாக, எரியூட்டும் பொறியியலாளராக, செய்தி அறிவிப்பாளராக, எழுத்தர்களாக, களஞ்சிய உதவியாளராக, படுக்கைப் பிணிப் பணியாளராக, மின்பொறியியலாளராக, சமையற்காரர்களாக, கப்பல் மேற்பார்வையாளராக, இசையாளராக, சாரதிகளாக மாலுமிகளைச் சேர்த்துக்கொள்வதற்கு வெற்றிடங்கள் உள.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்களும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தக்கூடியவர்களுமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

3. (அ) **பொது நிபந்தனைகள்.**—ஓர் அபேட்சகர்—

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் ஏழாம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) பின்வரும் ஆகக் குறைந்த உடல் தகைமைகளையாவது உடையவராக இருத்தல் வேண்டும்.

(அ) உயரம்—5 அடி 4 அங்குலம்

(ஆ) நிறை—105 இருத்தல்

(இ) மார்பு அளவு—32 அங்குலம் (விரிவடையாத நிலை)

(v) **வயது எல்லை.**—1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி 18 வயதிற்குக் குறையாமலும் 21 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

(vi) வைத்திய தராதரம் கடற்படைத் தளபதியினால் விதித்தபடி இருத்தல் வேண்டும்.

(ஆ) **விசேட நிபந்தனைகள்.**—மேலே உள்ள 3(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொது நிபந்தனைகளைவிடக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் **மேலதிக** தகைமைகளை உடைய அபேட்சகர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் கிளைகளுக்கு விண்ணப்பித்தால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**எரியூட்டும் பொறியியலாளர்/மின் பொறியியலாளர்**

(i) தொழில்நுட்பக் கல்லூரிகளில். வர்த்தக பாடசாலைகளில் பெற்ற பயிற்சி அல்லது நன்கு நிறுவப்பட்ட கைத்தொழில் நிலையங்களில் பெற்ற தொழிற் பயிற்சி.

(ii) க.பொ.த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் கணிதத்தில் பெற்ற ஒரு சித்தி.

**செய்தி அறிவிப்பாளர்**

ஆங்கிலம் வாசிக்கவும் எழுதவும் ஆற்றல்.

**எழுத்தர்/களஞ்சிய உதவியாளர்**

(i) தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கு **வைத்தல், கணக்கி**யல் என்பவற்றில் அறிவு/அனுபவம்.

(ii) க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் வர்த்தக பாடங்களும் ஆங்கிலமும்.

**படுக்கைப் பிணிப் பணியாளர்**

(i) க. பொ. த. (சாதாரணதர)ப் பத்திரப் பரீட்சையில் இரசாயனவியல், பௌதிகவியல், ஆங்கிலம், கணிதம் என்பவற்றில் சித்திகள்.

(ii) மருந்து கலப்பதில் அனுபவம்/தொழிற் பயிற்சி.

**சமையற்கர்ரர்**

(i) விடுதிப் பாடசாலையில் பயிற்சி.

(ii) மேல்நாட்டு/கீழ்நாட்டு சமையல்முறை அனுபவம்.

**கப்பல் மேற்பார்வையாளர்**

(i) விடுதிப் பாடசாலையில் பயிற்சி.

(ii) கைப்பணியாள், காத்திருக்குமாள், மதுபானச் சாலையாள் என்பவராகக் கடமைபுரிந்த அனுபவம்.

**சாரதி**

பார வாகனங்களைச் செலுத்துவதில் திறமையான சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**இசையாளர்**

(i) எந்த இசைக் கருவியையும் (மேல் நாட்டு அல்லது கீழ் நாட்டு) இயக்கி, அல்லது பாடிச் செயற்படுத்தும் திறமை.

(ii) கிளாறினெற், சக்ஷபோன், றெம்போன், புளூற் (மேற்கு நாட்டு), பியானோபோர்ட், கிற்ரார் அல்லது கண்டி வாத்தியம் என்பவற்றில் வினைத்திறமை.

**குறிப்பு.**—குறித்த ஒரு நியமனத்திற்கு வேண்டப்பட்ட தொழில்நுட்ப அல்லது விசேட அறிவைக் கொண்டுள்ள ஓர் அபேட்சகருக்கு வயது எல்லை 45 ஆக நீடிக்கப்படும். அத்துடன்/அல்லது கேட்கப்பட்ட கல்வித் தகைமைகள் தளர்த்தப்படும். இது விசேடமாக எரியூட்டும் பொறியியலாளர்/மின் பொறியியலாளர், கப்பல் மேற்பார்வையாளர், சமையற்காரர், சாரதி என்னும் கிளைகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தும்.

4. **ஆட்சேர்த்தல் முறை.**—தேர்வுபெறும் அபேட்சகர்கள் மேலே காட்டப்பட்டுள்ள கிளைகளுக்கு நியமிக்கப்படுவார்கள். அக்கிளைகளில் அவர்களுடைய உறுதிப்படுத்தலானது ஆட்சேர்த்தல் பயிற்சி நெறியின் திறனைப் பொறுத்திருக்கும். தேர்வு பெறுவோர் அத்தகைய பயிற்சி நெறியின் நிறைவைப் பொறுத்து, கிளைமாற்றத்திற்கு அல்லது கடற்படைத் தளபதியின் தற்றுணிபின்படி நீக்கத்திற்கு ஆளாவார்கள்.

5. **சேவை நிபந்தனைகள்.**—சேவை நிபந்தனைகள், கடலோடிகளின் ஆட்திரட்டல் நிரலினையும், 1950 ஆம் ஆண்டின் சேவை ஒழுங்கு விதிகளையும்; (1950, டிசெம்பர் 9 ஆம் திகதிய 10,187 ஆம் இலக்க இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டது), அதற்குப் பின்னர் காலத்திற்குக் காலம் மேற்சொல்லப்பட்ட ஒழுங்குவிதிகளில் செய்யப்படும் மாற்றங்களையும் உள்ளடக்குவதுடன் அவைகள் ஆட் சேர்த்தல் திகதியிலிருந்து நடைமுறையிலிருந்தும் வரும்.

6. **சேவையில் ஈடுபடுத்தற் காலவெல்லை.**—(அ) தெரிவுசெய்யப் பெறும் ஓர் அபேட்சகரானவர், முதற்கண் ஓர் ஐந்து (5) ஆண்டு காலவெல்லைக்குச் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். இக்காலவெல்லையின்போது அவருடைய சேவை திருப்திகரமானதாயின், அவரது

சேவையானது முறையே ஏழு (7) ஆண்டுகளாலும் பத்து (10) ஆண்டுகளாலும் நீடிக்கப்படலாம். பொதுவாக, இருபத்திரண்டு (22) ஆண்டுகளைக் கொண்ட காலவெல்லையொன்றுக்கு மாத்திரமே அவர் சேவைபுரிவதோடு, அவ்வேளை சேமலாப நிதி நலங்களுக்கு அவர் அருகதையுடையவராவார்.

(ஆ) இவற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், சேவையிலிருந்து விடுபடுத்தல் அல்லது மீளச்சேவையிலீடுபடுத்தல் ஒவ்வொன்றும், கப்பலோட்டியானவர் ஐம்பத்தைந்து (55) வயதை எய்தியதும், முடிவுறுத்தப்படும்.

7. (அ) **சம்பள விகிதங்களும் படிகளும்.**—ஒரு கடலோடிக்கு அவரது நிலையான வரிசைப் பதவிக்கான திரட்டிய சம்பள அளவு பின்வருமாறு அமையும் :—

சேர்தல் காலம்—ஆண்டுக்கு ரூபா 2,700.

சாதாரண கடலோடி ரூபா 2,800—15 × 60 ரூபா 3,780.

திறமையான கடலோடி—ரூபா 3,060—15 × 60—ரூபா 3,960.

தலையாய கடலோடி—ரூபா 3,660—15 × 72—ரூபா 4,740.

சிறு திற அலுவலர்—ரூபா 4,620—10 × 90—ரூபா 5,520.

பிரதான சிறு திற அலுவலர்—ரூபா 5,010—10 × 90—ரூபா 5,910.

அதி பிரதான சிறு திற அலுவலர்—ரூபா 5,640—10 × 144—ரூபா 7,080.

(ஆ) பயிற்றப்பட்ட கடலோடிகள் சேவையில் சிறப்புப் பெற்றவராகக் கருதப்படுவர், சிறு உயர்வுச் சம்பளத்திற்குத் தகுதியுடையவராவர்.

(இ) விவாகமான கடலோடி ஒருவருக்கு விவாகப்படி ஒன்று வழங்கப்படும். அத்தகைய விகிதம் அரசாங்க சேவையில் பெறும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஏற்றவாறு அவருக்குப் பொருந்தும்.

8. பின்வரும் விதிகள் ஆட்திரட்டல் விண்ணப்பங்களுக்குக் கையாளப்பட வேண்டும்.

(அ) இவ்வறிவித்தலின் முடிவில் தோன்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் போல் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கடற்படைத் தளபதி, கடற்படைத் தலைமை அலுவலகம், த. பெ. இல. 593, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மாலுமிகளைச் சேர்த்தல்" என்று குறிப்பிடுவதுடன் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் கடற்படைத் தலைமை அலுவலகத்தை வந்தடையுமாறு அனுப்பப்படுதலும் வேண்டும்.

(இ) அரசாங்க ஊழியர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவருக்கு ஊடாக அனுப்பப்படுவதுடன் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிக்கப்படுவார் என்று குறிப்பிடப்பட்ட திணைக்களத் தலைவரின் கடிதம் ஒன்றும் அத்துடன் இணைக்கப் படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றை இணைத்தல் வேண்டும் :—

(i) விண்ணப்பதாரரின் நல்லொழுக்கத்தையும் ஆட்சேர்த்தலுக்குத் தகுதி என்பதையும் குறிப்பிட்டெழுதிப் பகுதிக் கிராம சேவையாளரிடமிருந்து பெற்றுள்ள ஒரு சான்றிதழ்.

(ii) விண்ணப்பதாரர் கடைசிப் பிறந்த தினத்திலன்றோ அதற்குப் பின்னரோ எடுத்த புகைப்படம் ஒன்று. அத்துடன் அதன் மறுபக்கம் கிராம சேவையாளரினால் அத்தாட்சிப் படுத்தப்படவும்வேண்டும்.

(iii) விண்ணப்பம் கிடத்தமை பற்றி அறிவிப்பதற்காகச் சொந்த முகவரி எழுதப்பட்ட தபால் உறை ஒன்று.

9. தேர்வு பெற்று நிரந்தரக் கடற்படையில் சேர்க்கப்படும் அபேட்சகர் அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும், வேறு ஒழுங்குவிதிகளுக்கும், சேர்தல் திகதியில் உள்ளவாறான அது போன்ற கட்டளைகளுக்கு அல்லது அறிவுறுத்துரைகளுக்கும் அல்லது அதன் பின்னர் காலத்திற்குக் காலம் அளிக்கப்படும் அது போன்ற நிபந்தனைகளுக்கும் இணங்குவார் என்பதை எழுத்து மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

10. முன்னைய படைச் சேவையாளர் ஒருவர் இவ்வெற்றிடங்களுக்கு உரிமை கோருவதானால் மேலே கொடுக்கப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்கு மேலதிகமாகப் பின்வருவனவற்றைக் கட்டாயம் நிரூபிக்க வேண்டும் :—

(அ) ஸ்ரீ லங்கா படைச் சேவையில், பிரித்தானிய பொதுநலப் படையில் அல்லது இலங்கைப் பாதுகாப்புப் படையில் ஒரு வருடத்திற்குக் குறையாத சேவையுடையவர் என்றும் ;

(ஆ) படைச் சேவையிலிருந்து விலகும்போது அவரது படைச் சேவை ஒழுக்கம் "மிக நன்று" என்னும் தரத்தினைப் பெற்றவர் என்றும் ;

(இ) மொத்தத் திரட்டல் சேவையில் உண்மையான எண்ணிக்கை ஆண்டுகள், மாதங்கள், நாட்கள் எவை என்றும் ;

நிரூபிக்க வேண்டும்.

11. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஓர் அபேட்சகர் பின்வரும் மூலச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் அல்லது தலைமைப் பதிவுகாரரினால் வழங்கப்பட்ட விசேட சான்றிதழ் (விண்ணப்பதாரரின் பிறப்புப் பதிவு பதியப் பெறுதிருந்தால்).

குறிப்பு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள், ஒழுங்குவிதி முறைக்கென உதவி பெறும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள், சாதகக் குறிப்புகள் முதலியன வயதை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) **கல்விச் சான்றிதழ்கள்.**—பாடசாலை விடுகைப் பத்திரம் (அல்லது விண்ணப்பதாரர் இப்பொழுது பாடசாலைக்குச் சென்று வந்தால் பாடசாலை அதிபரிடமிருந்து ஒரு கடிதம்) அத்துடன் ஒவ்வொரு பொதுப் பரீட்சைகளுக்கும் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது அத்தகைய பரீட்சைகளில் சித்தி பெற்ற பாடங்கள்.

(இ) கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட நற்சான்றிதழை விட, விண்ணப்பதாரரின் நல்லொழுக்கத்தை அல்லது தொழிலுக்குத் தகுதி என்பதைக் காட்டும் மூன்று நற்சான்றிதழ்கள், விண்ணப்பதாரர் சேவையிலுள்ளவராயின் அவைகளில் ஒன்று இப்பொழுது வேலை கொடுப்பவரின் ஒரு விதப்புரையாக இருத்தல் வேண்டும்.

12. ஒரு விண்ணப்பம் தபாலில் தவறும் அல்லது பிந்தும் குற்றச் சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அபேட்சகர் தம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கப் பிந்தின் அத்தகைய செயல் அவர்களுடைய தவறேயாகும்.

13. விண்ணப்பத்துடன் சொந்த முகவரியிடப்பட்ட தபாலுறை ஒன்று அனுப்பினால் மட்டுமே விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும்.

14. முடிவுத் திகதிக்கு முன்னர் திணைக்களத் தலைவரினால் விண்ணப்பம் அனுப்பப்பட்டால் அத்துடன் பிந்தியதற்கான ஏற்ற காரணத்தைக் காட்டித் திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டால் அல்லது அரசாங்க திணைக்களத் தலைவர் ஒருவருக்கூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் முடிவுத் திகதிக்குப்பின்னர் இவ்வலுவலகத்திற்குக் கிடைக்குமானால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

15. தகுதியான அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு முதல் அழைக்கப்படுவார்கள். (ஒரு கிளையிலும் மேலதிகமாக விண்ணப்பித்தவர் ஒன்றுக்கு அதிகமான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்) இவ்வறிவித்தலின் பந்தி 3 (அ) வின் (i) முதல் (v) வரையுள்ள பொது நிபந்தனைகளை அவர்கள் திருப்திப்படுத்தினால் அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். தேர்ந்தெடுக்கப்படுவர்கள் மேலும் விசாரணைகளுக்காக ஒன்றுக்கு அல்லது அதிகமான வைத்தியப் பரீட்சைகளுக்குத் தோற்றும்படி வேண்டப்படுவார்கள். இறுதித் தெரிவுச் சபைக்குத் தோற்றிய பின்னர் மட்டும் இறுதித் தெரிவுகள் செய்யப்படும்.

குறிப்பு.—நேர்முகப் பரீட்சைகளுக்கு அல்லது வைத்தியப் பரீட்சைகளுக்குத் தோற்றுபவர்களுக்குப் பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டா.

16. ஒருவருடைய பெற்றோரின் அல்லது சட்டமுறையான பாதுகாவலரின் சம்மதத்தை முதல் பெற்றால் அன்றி அபேட்சகர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். அத்தகைய சம்மதம் எழுத்து மூலம் இருப்பதுடன் அப்பகுதிக் கிராம சேவையாளரினால் அத்தாட்சிப் படுத்தப்படவும் வேண்டும்.

17. ஓர் அபேட்சகரை விதந்துரைக்க எவராவது விரும்பினால் அவருக்கு ஒரு நற்சான்றிதழை வழங்குதலின் பேரில் அப்படிச் செய்யலாம். ஓர் அபேட்சகரைத் தெரிவு செய்யப்படுதற்கு உதவ எத்தனித்தாலோ அல்லது ஆதரவு தேட முயன்றாலோ அத்தகைய அபேட்சகர் தகைமை நீக்கத்திற்கு ஆளாக்கப்படுவார்கள்.

18. விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட ஏதாவது விபரம் பிழையானதாகக் கண்டு பிடிக்கப்பட்டால் தெரிவுக்கு முன்னர் அப்பிழை கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும் சேர்க்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் கடற்படையிலிருந்து விலக்குதலுக்கும் அவ்விண்ணப்பதாரர் ஆளாக்கப்படுவார்.

டீ. பி. குணசேகர,
கொமொடோர்,
கடற்படைத் தளபதி.

கொழும்பு,
1973 ம் ஆண்டு நொவம்பர் மீ 29 ந் உ.

விண்ணப்பப் படிவம்

மாலுமிகளுக்கான வெற்றிடங்கள்—ஸ்ரீ லங்கா கடற்படை

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்) :————.
2. விண்ணப்பிக்கப்படும் கிளை (முன்னுரிமை ஒழுங்கின்படி) ;
(அ)
(ஆ)
(இ)
3. தபால் முகவரி (தபாற் கந்தோர் உட்பட) :————.
4. மாகாணம் :————.
5. தேர்தற்றொகுதி :————.
6. பிறந்த திகதி :————.
7. 05.02.1973 இல் வயது :————.
8. சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகைமைகள், அத்துடன் திகதிகள் :————.
9. மேற்படி பரீட்சை சித்தி அடைந்துள்ள மொழி :————.
10. பந்தி 3 (ஆ) வின் நியதிகளுக்கு இணங்க ஒவ்வொரு கிளைக்கும் விண்ணப்பிக்கக்கூடிய விசேட தகைமைகள் :—.
(அ)
(ஆ)
(இ)
11. வேறு ஏதாவது தகைமைகள் :————.
12. விளையாட்டு அருஞ்செயல்கள் :————.
13. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து ஆற்றிவரும் தொழில் (முழு விபரங்கள் தருக) :————.
14. இப்பொழுது ஆற்றும் தொழில் :————.
15. உயரம் :................அடி..................அங்குலம்.
நிறை :..................இறாத்தல்.
மார்பு :..................
16. இனம் :————.
17. அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம் :————.
18. கடற்படையில், விமானப்படையில், தொண்டர் படையில் ஆற்றிய எல்லாச் சேவைகளும் ; திகதிகளும் ; வகித்த பதவிகளும் ஏதும் இருந்தால் ; முழு விபரங்கள் :————.
19. விடுவித்தல்/விலக்கப்படுதலின்போது ஒழுக்கம் :————.
20. வேறு ஏதாவது பொருத்தமான விபரங்கள் :————.
21. சமர்ப்பிக்கப்பட்ட நற்சான்றிதழைப் பெற்ற கிராமசேவையாளரின் பெயர் :————.

என்னால் மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் சரியானவை என்று என் நம்பிக்கையின் பேரில் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

12-305—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## இலங்கை தரைப்படை—பிறவரிசையினர் நியமனம்

இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் நேரடியான போர்வீரர்களாகச் சேருவதற்கான ஆளின்மைகள் உள்ளன. கீழே தரப்பட்டிருக்கும் நியமனங்கள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

| நியமனம் | கூறு | வேண்டப்படும் விசேட தகைமைகள் |
|---|---|---|
| (அ) படையினர்—(வாகனம் பழுது பார்ப்போர்கள்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற கராஜ் அல்லது ஸ்தாபனம் ஒன்றில் குறைந்த பட்சம் 3 வருடகால மோட்டார் வாகனப் பழுதுபார்த்தலில் ஈடுபாடு அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும். டீசல் பழுதுபார்த்தல் வேலையறிவு உடையோருக்கும், கணிதம், பொது விஞ்ஞானம் என்பனவற்றில் சித்தியடைந்திருப்போர்க்கும் முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித்தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படும். |
| (ஆ) படையினர்—(சாதனதொழில் நுட்பவியலாளர்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் குறைந்த பட்சம் 3 வருட காலம் ஒளியியலையும் மின்கருவிகளையும் பழுதுபார்த்தல் அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும். கணிதம், பொதுவிஞ்ஞானம் என்பனவற்றில் சித்தியடைந்திருப்போர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (இ) படையினர்—(தட்டெழுத்துப் பொறி பழுது பார்ப்போர்கள்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் குறந்த பட்சம் 3 வருடகாலம், ஆங்கில, சிங்கள தட்டெழுத்துப்பொறிகள் பழுதுபார்த்தலில் அனுபவம் உடையோராய் இருத்தல் வேண்டும். கணிதம், பொதுவிஞ்ஞானம் என்பவற்றில் சித்தியடைந்திருப்போபோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஈ) படையினர்—(ஆயுதாளர்கள்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பொது ஆயுதங்கள் பழுதுபார்ப்பதில் நல்ல அனுபவம் உடையவராய் இருத்தல் வேண்டும். பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் வேலைக்களப்பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். கணிதம் பொதுவிஞ்ஞானம் என்பனவற்றில் சித்தியடைந்திருப்போர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (உ) படையினர்—(மின்சார வேலையாளர்கள்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்தி பெற்ற கராஜ் அல்லது ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருடகால வாகன மின்சாரப் பொருத்தல் வேலையில் அனுபவம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். பொறித்தொகுதி மின்னியல் அனுபவமும் கணிதம், பொதுவிஞ்ஞானம் என்பனவற்றில் சித்தியடைந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.<br><br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

| நியமனம் | கூறு | வேண்டப்படும் விசேட தகைமைகள் |
|---|---|---|
| (ஊ) படையினர்—(சாயம் பூசுவோர்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் குறைந்த பட்சம் 3 வருடகாலம் தொழில் அனுபவம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். சிவிறு நிறம் பூசலிலும் குறி எழுதலிலும் நல்ல அனுபவம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.<br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமாமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (எ) படையினர்—(உலோகத்தகடு வேலையாளர்/காய்ச்சி ஒட்டுவோர்கள்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்தி பெற்ற கராஜ் அல்லது ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருடகாலம் தொழில் அனுபவம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். வில்முறைப் படி காய்ச்சி இணைக்கும் அனுபவம் இருத்தல் வேண்டும். கொல்லார வேலை அனுபவம் கூடுதலான தகைமையெனக் கணிக்கப்படும்.<br>ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஏ) படையினர்—(வண்டிப்பெட்டி கோலஞ்செய்பவர்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் குறைந்த பட்சம் 3 வருடகாலம் எல்லாவிதமான மேலுறை, இருட்டு என்பனவற்றை பழுதுபார்த்தல் அனுபவம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.<br>ஆகக் குறைந்த கல்வித்தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஐ) படையினர் — (குளிரேற்றி பொறியியலாளர்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருடகாலம் குளிரேற்றி பொறித்தொகுதியையும் சாதனத்தையும் பழுதுபார்த்தல் அனுபவம் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.<br>ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| (ஒ) படையினர் — (பொதுவான பொருத்தலாளர்கள்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் குறைந்த பட்சம் 3 வருடகாலம் தொழில் அனுபவம் உடையவர்களாயும் பிரசித்த ஸ்தாபனம் ஒன்றில் வேலைக்களப் பயிற்சி நெறிப் பயிற்சி பெற்றவர்களாயும் இருத்தல் வேண்டும். கணிதம் பொதுவிஞ்ஞானம் என்பனவற்றில் சித்தியடைந்திருப்போர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல். வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| ஓ) படையினர்—(கொல்லர்) | இ.மி.பொ.எ. .. | விண்ணப்பகாரர்கள் பிரசித்திபெற்ற ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருட காலம் கொல்லார வேலையிலும், அத்துடன் எல்லாவிதமான உலோகங்களையும் சூடாக்கும் முறையில் அனுபவம் உடையவர்களாயும் இருத்தல் வேண்டும். கதிர்வீசிகளையும் சார்பு வேலைக்களச் சாதனங்களையும் பழுதுபார்த்தல் கூடிய தகைமை எனக் கொள்ளப்படும். கணிதம், பொதுவிஞ்ஞானம் என்பனவற்றில் சித்தியடைந்திருப்போர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>ஆகக்குறைந்த கல்வித் தகைமைகள் : சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஜே.எஸ்.சி. அல்லது தரம் 8 ல் அல்லது இதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். கூடிய கல்வித் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |

2. விண்ணப்பகாரர்களின் தகைமைகளை நிரூபிக்கும் பொருட்டு தேர்தலுக்கு முன் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

3. இவ்விளம்பரத்தின் முதலாம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனினும், இலங்கைத் தொண்டர் படையைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரை கேட்கப்பட்டுள்ள 3 வருட கால தொழில் அனுபவம் ஒரு வருடத்திற்குப் குறைக்கப்பட்டுள்ளது.

4. இலங்கைத் தரைப்படையில் நேரடியான போர்வீரர்களாகச் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு முதலாம் பந்தியில் கேட்கப்பட்டுள்ள தகைமைகளையும் பின்வரும், மேலதிகமான பொது நிபந்தனைகளையும் விண்ணப்பகாரர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

ஒரு அபேட்சகர்—

(அ) இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1974 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைத் தரைப்படைத் தளபதியின் திருப்திக்கேற்ப வைத்தியப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஈ) உயரத்தில் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும். எனினும், இலங்கைத் தரைப்படைத் தளபதியின் தீர்மானத்திற்கேற்ப தகுதியுடையவர்கள் எனக் காணப்படும் 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைந்த உயரம் உடையோரைச் சேர்த்துக்கொள்ளப்படும் ;

(உ) அரசகரும மொழியில் தேர்ச்சி உண்டு என்பதைத் தெளிவாக அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

5. **சேவைக்காலவெல்லை ஒப்பந்தம்.**—ஒரு போர்வீரர் பன்னிரண்டு வருடகால சேவைக்குப் பதிவுசெய்யப்படுவார், இதில் 5 வருட காலம் பூரண சேவையிலும், 7 வருட காலம் மேற்படையிலும் சேர்த்துக்கொள்ளப்படுவார். இச்சேவைக்கால வரையறை முடிவில் சேவையில் இருந்து விலக்கப்படலாம். எனினும், குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் ஓர் போர்வீரர் தனது சேவைக்காலத்தை மேலும் 12 வருடங்களுக்கு நீட்டிக்கொள்ளலாம். இச்சேவைக்காலம் எல்லாவற்றினதும் மொத்தம், மூலமான ஆள்திரட்டலில் இருந்து 32 வருடங்களாகும்.

6. **சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படிகளும்.**—இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையின் பிற வரிசையினருக்கான சம்பள விகிதமும் வாழ்க்கைச் செலவுப்படியும் பின்வருமாறுனதாகும் :—

(அ) பிரிவு III—தொழில் நுணுக்கமற்ற 1, 2, 3 ம் தரத்தினரும் பிரிவு " B " வகுப்பு 1, 2, 3 ம் தரத்தினரும் உட்பட தொழில் நுணுக்கம் உடையோரும்.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான | ரூபா 2,880—15 × 60—ரூபா 3,780 |
| லான்ஸ் கோப்றல் அல்லது சமமான | ரூபா 3,060—15 × 60—ரூபா 3,960 |
| கோப்றல் அல்லது சமமான | ரூபா 3,660—15 × 72—ரூபா 4,740 |
| சார்ஜண்ட் | ரூபா 4,620—10 × 90—ரூபா 5,520 |
| ஸ்டாப் சார்ஜண்ட் | ரூபா 5,010—10 × 90—ரூபா 5,910 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் II | ரூபா 5,220—10 × 120—ரூபா 6,420 |
| றெஜிமென்டல் குவாட்டமாஸ்டர் சார்ஜண்ட் | ரூபா 5,340—10 × 120—ரூபா 6,540 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் I | ரூபா 5,640—10 × 144—ரூபா 7,080 |

(ஆ) பிரிவு II—தொழில் நுணுக்கமுடைய பிரிவு " A " 1, 2, 3 ம் வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட.

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான | ரூபா 2,940—15 × 60—ரூபா 3,840 |
| லான்ஸ் கோப்றல் அல்லது சமமான | ரூபா 3,120—15 × 60—ரூபா 4,020 |
| கோப்றல் அல்லது சமமான | ரூபா 3,720—15 × 72—ரூபா 4,800 |
| சார்ஜண்ட் | ரூபா 4,800—10 × 90—ரூபா 5,700 |
| ஸ்டாப் சார்ஜண்ட் | ரூபா 5,250—10 × 90—ரூபா 6,150 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் II | ரூபா 5,520—10 × 120—ரூபா 6,720 |
| றெ. கு. மா. சா. | ரூபா 5,700—10 × 120—ரூபா 6,900 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் I | ரூபா 5,940—10 × 144—ரூபா 7,380 |

(இ) பிரிவு I—தொழில் நுணுக்கமுடைய பிரிவு " X " 1, 2, 3 ம் வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட

| வரிசை | முழுச்சம்பளம் (வருடம்) |
|---|---|
| படையினர் அல்லது சமமான | ரூபா 3,000—15 × 60—ரூபா 3,900 |
| லான்ஸ் கோப்றல் அல்லது சமமான | ரூபா 3,240—15 × 60—ரூபா 4,140 |
| கோப்றல் அல்லது சமமான | ரூபா 3,840—15 × 72—ரூபா 4,920 |
| சார்ஜண்ட் | ரூபா 4,920—10 × 90—ரூபா 5,820 |
| ஸ்டாப் சார்ஜண்ட் | ரூபா 5,340—10 × 90—ரூபா 6,240 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் II | ரூபா 5,700—10 × 120—ரூபா 6,900 |
| றெ. கு. மா. சா. | ரூபா 5,880—10 × 120—ரூபா 7,080 |
| ஆணைச்சீட்டு உத்தியோகத்தர் I | ரூபா 6,120—10 × 144—ரூபா 7,560 |

(ஈ) **விவாகமான பிற வரிசையினருக்கான வாழ்க்கைச் செலவுப்படி.**—விவாகமான பிறவரிசையினருக்கு பொது ஊழியருக்குப் போன்ற முறையிலான விகிதமான வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும்.

(உ) **சலவைச் செலவுப்படி :**

(1) பாசறையில் வசிக்கும் போர்வீரர்கள் தம் இராணுவ உடைகளை இலங்கைத் தரைப்படையின் செலவில் இலவசமாகச் சலவை செய்துகொள்ள அருகதை உடையவராவார்கள்.

(2) பாசறைக்கு வெளியே வசிக்கும் போர்வீரர்கள் இலங்கைத் தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் தனது இராணுவ உடைகளைச் சலவை செய்து கொள்வதற்காக ஒரு சலவைச் செலவுப்படியைப் பெற அருகதை உடையவராவார்கள்.

(ஊ) கீழ்க்காணும் வகையிலான நன்நடத்தைப்படி ஒன்றிற்குப் பிறவரிசையினர் அருகதை உடையவராவார்கள் :

1 ம் பதக்கம்—4 வருட கால சேவை முடிவுக்குப் பின்—நாளொன்றுக்கு 25 சதம்.
2 ம் பதக்கம்—8 வருட கால சேவை முடிவுக்குப் பின்—நாளொன்றுக்கு 50 சதம்.
3 ம் பதக்கம்—12 வருட கால சேவை முடிவுக்குப் பின்—நாளொன்றுக்கு 75 சதம்.

(எ) கீழ்க்காணும் இடங்களில் சேவைக்கு அமர்த்தப்படும் பிறவரிசையினருக்கு **கஷ்டப்** பணிப்படி ஒன்றும் வழங்கப்படும் :—

(1) மன்னார், யாழ்ப்பாணம், ஆகிய இடங்களில் உள்ள கள்ளக்கடத்தல் குடியேற்றத்தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்,
(2) வளவை, பதவிய, முதியன்கட்டுக்குளம் ஆகிய இடங்களில் உள்ள விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.
(3) இலங்கைத் தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் நிர்மான வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டால்.

(ஏ) **அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை.**—ஒவ்வொரு போர்வீரரும், போர்வீரராகத் திரட்டிக் கொள்ளப்பட்டதும் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு தனது உதவுதொகையாகத் தனது ஒன்று திரட்டிய சம்பளத்தின் ஆறு சத வீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தனது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படக்கடவர்.

7. இவ்வறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ளபடி நேரடியான போர்வீரர் காலி ஸ்தானங்களுக்கு விண்ணப்பிக்கும், விண்ணப்பங்கள் யாவும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும் :

(அ) விண்ணப்பங்கள் யாவும் இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் போன்றதாகவும், விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பக்காரரின் சொந்தக் கையெழுத்தினால் தயாரிக்கப்பட்டதாயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள், இலங்கைத் தரைப்படை ஆள்திரட்டும் அதிகாரி, இலங்கைத் தரைப்படைத் தலைமை நிலையம், அஞ்சல் பெட்டி 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்திலும் அவற்றை அனுப்பும் உறையிலும் " விண்ணப்பம் பிறவரிசையினர்—படையினர்—இலங்கை மின்முறை பொறிமுறை எந்திரவியலாளர் " என்று குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 1974 ம் ஆண்டு சனவரி மாதம் 15 ம் திகதி பி. ப. 4 மணிக்கு முன்னர் மேற்படி முகவரிக்குச் சேர வேண்டும்.

(இ) பின்வரும் சான்றுப்பத்திரங்களின் பிரதிகள் மட்டும் விண்ணப்பங்களுடன் இணைத்திருத்தல் வேண்டும் :

(1) பிறப்புச்சான்றுப் பத்திரம் (அல்லது பிறப்பு பதிவு செய்யப்படாத விண்ணப்பக்காரர்களைப் பொறுத்தவரையில்) பிரதம பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப்பத்திரம் ஞானஸ்நானப்பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றுப்பத்திரங்கள் அல்லது இது போன்ற வேறும் பிறப்புக் குறிப்புக்கள் எதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

(2) பெற்றுக்கொள்ளப்பட்ட ஆகக் கூடிய கல்வித் தகைமையைக் காட்டும் கல்வித் தராதரப்பத்திரம்.

(3) தொழில் அனுபவத்தைக் குறிக்கும் சான்றிதழ்.

(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்டனவும் விண்ணப்பக்காரரின் கல்வித் தராதரம், நடத்தை, விண்ணப்பிக்கும் பதவிக்கான தகுதி என்பன பற்றிக் குறிக்கும் மூன்று நற்சான்றுப் பத்திரங்கள். ஒரு விண்ணப்பகாரர் ஏற்கனவே தொழில் செய்பவரானால் இதில் ஒன்று அவரது தற்போதைய மேல்அதிகாரியால் கொடுக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(5) விளையாட்டு, பயிலுநர் சிறப்பணிப் பயிற்சிகள் சம்பந்தமான சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—(1) விண்ணப்பகாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மட்டுமே இச்சான்றுப் பத்திரங்களின் உண்மைப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பியதால் தவறும் அல்லது காணமல் போகும் எவ்விதமான தஸ்தாவேஜுகளின் உண்மைப் பிரதிகள் சம்பந்தமாக இலங்கைத் தரைப்படைத் தலைமை நிலையம் எந்தவிதமான பொறுப்பும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

(ஈ) தபாலில் அனுப்பியதால் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்கள் சம்பந்தமாகச் செய்யப்படும் எந்தவிதமான முறையீடுகளும் கவனிக்கப்படமாட்டாது.

(உ) இலங்கைத் தொண்டர் படையின் அங்கத்தவர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்/பேரணித் தலைமை நிலையத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத்திற்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) அரசாங்க திணைக்களத்திற்கூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட, ஆனல் உரிய காலத்திற்குப் பின் இத் தலைநிலையத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில், தாமதத்திற்குப் போதிய காரணங்களைக் காட்டி, விண்ணப்பங்கள் உரிய காலத்தில் தமது திணைக்களத்தில் கிடைத்ததென்றும் அது ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும் திணைக்களத் தலைவரால் சிபாரிசு செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஏ) இலங்கைத் தரைப்படைத் தெரிவுக் குழுவால் தகுதியுள்ளவர் எனக் கருதப்படும் விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இவ்வாறு வேண்டப்படும் விண்ணப்பகாரர்களுக்கு அவ்வாறுணமை பற்றி நேரம், காலம், இடம் என்பன தனித்தனியாக அறிவிக்கப்படும்.

(ஐ) நேர்முகப் பரீட்சைக்குப் பின் சேர்த்துக்கொள்ளத் தகைமையுடையவர் எனத் தெரிவுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவில் ஒன்று அல்லது பல வைத்தியப் பரிசோதனைகளுக்கு கொழும்பில் சமுகமளிக்க வேண்டும்.

(ஒ) தேவையான பரிசோதனைகளையும், நேர்முகப் பரீட்சைகளையும் தேர்ச்சியாய் முடித்த விண்ணப்பகாரர்கள் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் சேர்க்கப்பட்டு இலங்கை தரைப்படைப் பயிற்சிக் கல்லூரியில் அல்லது வேறேதேனும் இடத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படுவர்.

(ஓ) தமது பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் சம்மதத்தை எழுத்து மூலம் சமர்ப்பித்தாலன்றி எந்த ஒரு 21 வயதுக்குக் குறைந்தவரும் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஔ) தெரிவு செய்யப்பட்டு தரைப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரர்கள் அனைவரும் 1956 ம் வருட 33 ம் இலக்க அரசகரும மொழிச் செயல்முறைக்கட்டளைச் சட்டத்திற்கும், அச்சட்டத்தை அமுல் நடத்தும் வகையில் ஆன எல்லாக் கட்டளைச் சட்டங்களுக்கும் இது சம்பந்தமாய் இனிமேல் நடைமுறைக்கு வரும் கட்டளைச் சட்டங்களுக்கும் அடங்கி நடக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

(க) எவரேனும் ஒருவர் விண்ணப்பகாரரைச் சிபாரிசு செய்ய விரும்பினல் அவருக்கு ஒரு நற்சான்றுப்பத்திரம் கொடுப்பதன் மூலம் அவரைச் சிபாரிசு செய்யலாம். அன்றி விண்ணப்பகாரர்கள் தெரிவு பெறுவான் வேண்டி வேறெந்த வகையிலேனும் அவருக்காகப் பிரசாரம் செய்தல் அல்லது சலுகை பெற முயற்சித்தல் போன்ற வேறும் எத்தனங்கள், சம்பந்தப்பட்ட விண்ணப்பகாரரையும் அவரின் விண்ணப்பத்தையும் நிராகரித்தற்கு ஏற்ற ஏதுக்களாகும்.

(கா) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எவையேனும் பிழையானவை என்று விண்ணப்பக்காரர் தெரிவு பெறுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இலங்கைத் தரைப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் எப்போதாவது கண்டு பிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர் பேரில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இலங்கை தரைப் படையில் இருந்தும் விலக்கப்படுவர்.

இலங்கைத் தரைப்படைத் தலைநிலையம்,
அஞ்சல் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,

இ. ரி. டி. இசற் அபேசேகரா,
கேர்ணல்,
இலங்கை தரைப்படைத் தளபதிக்காக.

**இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் பிற வரிசையினராகச் சேருவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்**

| விண்ணப்பகாரர் பதிவு செய்யப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் தேர்தல் மாவட்டம் : | விண்ணப்பகாரர் உட்படுத்தப்பட்டுள்ள நிருவாக மாவட்டம் : |
|---|---|
| ........................................ | ........................................ |

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. பிறந்த திகதி :————. வயது :————,
4. கல்வித் தகைமைகள் : ————.
5. எந்த நியமனத்திற்காக விண்ணப்பம் செய்துள்ளீர் ? : ————.
   (1 ம் பந்தியின் பிரகாரம் நியமனம் குறிப்பிடல் வேண்டும்)
6. இந்த நியமனம் சம்பந்தமாக 1 ம் பந்தியின் பிரகாரம் உமக்குரிய விசேட தகைமைகளையும் அனுபவங்களையும் குறிப்பிடுக : ————.
7. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்டு விலகிய பின் செய்த தொழில் :————.
8. உயரம் : அடி ———— அங். ————.
9. தேசிய இனம் : ————.
10. அருகாமையில் உள்ள தபால்/தந்தி நிலையம் : ————.
11. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ————.
12. தரைப்படை (யுத்தகால சேவையுட்பட) கடற்படை, ஆகாயப்படை, தொண்டர்படை ஆகிய பிரிவுகளில் சேவைசெய்திருப்பின் அவற்றின் பிரிவு, தகுதிகள் ஆகியவற்றை முழு விபரங்களுடன் குறிப்பிடுக : ————.
13. வைத்தியப் பரிசோதனையில் நீர் இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை அல்லது இலங்கை ஆகாயப்படை ஆகியவற்றில் ஒன்றில் சேவை செய்வதற்கு தகுதியற்றவர் எனத் தள்ளுபடி செய்யப்பட்டதுண்டா ? : ————.
14. இராணுவத்தில் இருந்து திரும்பிய/விலகியபோது உமது நடத்தை : ————.
    (திரும்பிய/விலகியபோது வழங்கப்பட்ட சான்றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்)
15. வேறும் எவ்விதமான தகுதிகள் இருப்பின் (விளையாட்டுக்கள் சம்பந்தப்பட்டவை:) ————.
16. 7 ம் பந்தி (இ) (4) ம் பிரிவின்படி நற்சான்றுப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் தகுதிகளும் : ————.
    1.
    2.
    3.
17. விண்ணப்பகாரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தவேண்டிய உறுதி : ————.

மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னல் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரை சரியானவை என்றும் ஏற்றுக்கொள்ளும்படியும் இத்தால் உறுதி கூறுகின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————

12–374—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

**ஆயுள்வேத திணைக்களம்**

மருத்துவ கண்காணிப்பாளர் பதவி, தரம் 1, ஆயுள்வேத மத்திய ஆசுபத்திரி

ஆயுள்வேத திணைக்களத்தின் ஆயுள்வேத மத்திய ஆசுபத்திரியின் முதலாந்தர மருத்துவ கண்காணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 4.1.74.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 11.1.74.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்ற குற்றச் சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசி நாட்கள்வரை தாமதிப்பவர்கள் அதனுல் ஏற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(ii) வெளிநாட்டிலுள்ள வேட்பாளர்கள் விரும்பினுல் தாம் வதியும் நாட்டிலுள்ள அல்லது அதற்கண்மை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்தில், சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர்கள், சேவைக்கு உடற்தகுதி உடையவரென்பதை உறுதிப்படுத்தற்பொருட்டு, அங்கீகாரம் பெற்ற மருத்துவத் தொழில் புரிவோரால் சோதிக்கப்படுதற்கு, அவர்கள் பிரசன்னமாகுமாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட்டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்படவேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்

(i) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் அற்றதுமாகும். அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகைகள் செலுத்தப்படவேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் வேட்பாளருக்குத் தனிப்பட்ட முறையில் வைத்தியத் தொழில் புரியும் உரிமை இருக்கமாட்டாது.

(iii) உறுதிப்படுத்தற்கு முன்னர், தேர்வு செய்யப்படும் வேட்பாளர் நிதிப் பிரமாணங்கள், திறைசேரிச் சுற்றுநிருபங்கள், தாபனக் கோவை, பொது நிருவாக சுற்றுநிருபங்கள் ஆகியவற்றில் திணைக்களம் நடத்தும் எழுத்துப் பரீட்சை ஒன்றிலும், ஆசுபத்திரி நிருவாகம் பற்றிய பிரமாணங்கள், சிங்களம்/தமிழ் மொழி ஆகியவற்றில் நடத்தப்படும் வாய்மூல பரீட்சையிலும் சித்திபெற வேண்டும். ஆயுள்வேத திணைக்களத்தின் (பொதுத்தர) மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு இப்பரீட்சை ஏற்புடைத்தாகும்.

இப்பரீட்சையில் சித்திபெறத் தவறுவோருக்குத் தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 9:6 ஆம் பிரிவு ஏற்புடைத்தாகும்.

3. சம்பள விகிதம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூ. 11,040—10 × 480, 3 × 600—ரூ. 17,640. ரூ. 14,880/- க்கு முன்னர் திறமைகாண் தடை, திணைக்களத் தலைவர் பணியையும் நடத்தையையும் பற்றித் தரும் சான்றிதழைத் தொடர்ந்து இருக்கும்.

4. வேண்டப்படும் கல்வித் தகைமைகள்.—ஒவ்வொரு வேட்பாளரும் பின்வருவனவற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவ வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமும் நல்ல உடற் சுகமும் பெற்றிருத்தல் ;

(ஆ) 14.12.1973 ஆம் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் (இத்திணைக்களத்தில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடைத்தன்று) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆயுள்வேதக் கல்லூரியின் டிப்ளோமா பெற்றிருத்தல் ;

(ஈ) அரசாங்க ஆயுள்வேத ஆசுபத்திரி ஒன்றில் வைத்தியராக இருந்து பத்து வருட அனுபவம் பெற்றவர் ;

(உ) ஆயுள்வேதத்தில் பட்டத்திற்குப் பின்னைய தராதரம் பெற்றிருத்தல் அல்லது ஆயுள்வேதத்தில் ஆரம்ப ஆராய்ச்சி செய்தவர் என்றோ அல்லது ஆயுள்வேதம் பற்றிப் பல பிரசுரங்களை வெளியிட்டுத் தலைசிறந்த சாதனையை ஏற்படுத்தியவர் என்ற பெயரோ பெற்றவர் ;

(ஊ) நிருவாகத்தில் ஆகக் குறைந்தது இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல்.

5. பின்வரும் பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையேனும் கேட்கப்படும்போது சமர்ப்பிக்குமாறு வேட்பாளர்கள் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமையக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா) ;

(ஆ) பட்டப்படிப்பு அல்லது ஆகக்கூடிய கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) குணச் சான்றிதழ்கள் இரண்டு. இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர்தொழிற் தகைமைச் சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இவை இரண்டும் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்துள்ள மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) பத்திரங்களோ அல்லது பத்திரங்களது படிகளோ விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படக்கூடாது ;

(ii) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் உள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் திணைக்கள அல்லது கூட்டுத் தாபனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான வேறெந்தக் கடிதத் தொடர்புகளும் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு விலாசமிடப்படவேண்டுமே தவிர மற்றெந்த உத்தியோகத்தருக்கும் அல்ல.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (II அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகிறது.

சி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1,
3—12—1973.

இல.———.
(அலுவலக பாவிப்புக்கு மாத்திரம்)

**சுகாதார அமைச்சு**

விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவி :———.
திணைக்களம் :———.

2. முழுப் பெயர் :———.
(தெளிவான எழுத்துக்களில்)

3. அஞ்சல் முகவரி :———.
(முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்க வேண்டும்).

4. பிறந்த திகதி :

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| ——— | ——— | ——— |

5. உள்நாட்டு விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியில் சரியான வயது :

| வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
|---|---|---|
| ——— | ——— | ——— |

6. நீர் ஓர் இலங்கைப் பிரஜையா ? வம்சாவளியினுலா அல்லது பதிவினுலா என்பதைக் குறிப்பிடுக. (தயவு கூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க.) ———.

7. பிறந்த இடம்—(தயவு கூர்ந்து குறிப்பு 2 ஐக் கவனிக்க)
அ. விண்ணப்பதாரர் :———.
ஆ. தந்தை :———.
இ. தந்தைவழிப்பாட்டன் :———.
ஈ. தந்தைவழிப் பூட்டன் :———.

8. அ. பால் :———.
ஆ. திருமணமானவர், தனியானவர், தாரமிழந்தவர் : ———.

9. பின்வருவனவற்றில் சித்தி எய்திய உயர் பரீட்சைகள் :

(அ) சிங்களம் (ஆ) தமிழ் (இ) ஆங்கிலம்

(1) :————.

(2) :————.

(3) :————.

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிறதாபன தாபனங்கள் ஆதியன.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | தாபனம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |
| 3. | | | 3. | | |
| 4. | | | 4. | | |
| 5. | | | 5. | | |

11. விளையாட்டுக்களில் பெற்ற சிறப்புக்களும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் :————.

12. (அ) நீர் பணமுடை ஏதுவும் இல்லாதவரா ? முடை இருப்பின் எவ்வளவுக்கு :————.

(ஆ) நீதிமன்றம் ஒன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ் சாட்டப்பட்டவரா ? அவ்வாறாயின் திகதி, வழக்கு இலக்கம் ஆதியவற்றோடு முழு விபரங்களையும் தருக :————.

13. உயர்கல்வி, உயர்தொழில் தொழில் நுட்பத் தகைமைகள் (பட்டங்கள், சிறப்புக்கள், உயர்தொழில், அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் அவை, பாடங்கள், நிலையங்களின் பெயர்கள் ஆகிய விபரங்களோடு தருக) :————.

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் ஏதுமிருப்பின் அதுவும் (தொழிலில் சேர்ந்த, விலகிய திகதிகளும் பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படுதல் வேண்டும்.) :

**முக்கியம் :** அரசாங்கத் தொழிலைவிட்டு விலகிய காரணத்தை இதன் கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்.

| | பதவி | தொடக்கம் | வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |
| 8. | | | | |

15. சிறப்புத் தகைமைகள் : (அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டும் உடையவரா ? அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவைகளைப் பார்க்க.) :————.

16. மேலும் விபரங்கள் ஏதுமிருப்பின் :————.

17. இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன் கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுதற்கும் தெரிவுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு ஏதுவுமின்றி வேலைநீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

குறிப்புகள் :

(1) பதிவு காரணமாக இலங்கைப் பிரஜையாயின் தொடர் எண்ணையும் பிரஜாவுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வைவிட (ஆ) அல்லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

வேட்பாளர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

————,
திணைக்களத் தலைவரின் பெயரும்
பதவிப் பெயரும்.

திகதி :————.

12-389—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## கல்வி அமைச்சு

### பாண்டு வாத்தியத் தலைவர்

கல்வி அமைச்சின் கீழுள்ள பாண்டு வாத்தியத் தலைவர் பதவிகளுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைத் திருப்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறைக்கு அமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர் (பொது நிர்வாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பாண்டு வாத்தியத் தலைவர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) இப்பதவிகள் நிரந்தரமானவையும் உபகாரச் சம்பள உரித்தற்றவையுமாகும். அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர், அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு புதிய முறைப்படி நியமிக்கப்படுவாராயின், தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும்.

(iii) அரசாங்க சேவையில் நிரந்தர நியமனம் ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின், விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் இத்துவீபத்தின் எப்பகுதியிலும் சேவை புரிய வேண்டும் ;

(v) ஆட்சேர்ப்பு, நேர்முகப் பரீட்சை ஒன்று மூலம் நடைபெறும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம்—ரூ. 2,640—15/60—3,540/-.

4. **தேவைப்படும் தகமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியன்று 40 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ஆ) குறைந்தபட்சம் கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது சமமான கல்வித் தகைமை பெற்றிருக்க வேண்டும்.

(இ) லண்டன் றினிற்றி சங்கீதக் கல்லூரி 5 ஆந் தர (செயல் முறை), (அறிமுறை) பரீட்சையில் சித்தி.

(ஈ) பித்தளை/மர குழல் வாத்தியக் கருவிகள் மூன்று அல்லது கூடியவற்றை வாசிக்கும் ஆற்றல்.

குறிப்பு.—இராணுவ பித்தளை பாண்டு வாத்திய கோஷ்டிகளில் வாத்தியம் வாசித்துள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அரசினர் சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் எவ் விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி, ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவி நியமிக்கப்படுவதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் இரண்டு சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்படத் தேவையில்லை).

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்திற்கே அனுப்பப்பட வேண்டும். எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படலாகா.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

பி. உடகம,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2,
05-12-1973.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

(8½"×13½" அளவு அரைத்தாளில் தயாரிக்கப்பட வேண்டியது)

பாண்டு வாத்தியத் தலைவர் பதவி

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) திரு./திருமதி/செல்வி : ————.

2. முழுப் பெயர் :————.

3. உத்தியோக முகவரி :————.

4. சொந்த முகவரி :————.

5. (அ) இலங்கையரா ? :————.

(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா, பதிவு காரணமாகவா :————.

6. சாதியம் :————.

7. விவாகம் செய்தவரா, செய்யாதவரா ? :————.

8. பிறந்த திகதி :—வருடம் ——— மாதம் ——— நாள் ———. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி வயது : வருடம்—— மாதம் —— நாள்——

9. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :—

(அ) பதவி :————.

(ஆ) நிரந்தரமா தற்காலிகமா :————.

இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா ? :————.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றீரா ? :————

(உ) திணைக்களம் :————.

(ஊ) நிலையம்/வேலை இடம் :————.

(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் : ————.

(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :————.

10. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—

| பரீட்சை | வருடம் | போதனமொழி | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

11. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| தராதரப் பத்திரம் | வழங்கியவர் (நிலையத்தின் பெயரைக் கொடுக்க) | வருடம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

12. பாண்டு வாத்தியத் தலைவராகப் பெற்றுள்ள அனுபவம், யாதேனும் இருப்பின் :

| நிலையம் | திணைக்களம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுக்கப்படவேண்டியது) :

| திணைக்களம் | நிலையம்/ வேலை இடம் | பதவி நிரந்தரமா/ தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா ? :————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

15. விண்ணப்பதாரி அரசாங்க அல்லது யாதேனும் கூட்டுத்தாபன சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா :————.
(அங்ஙனமாயின் விபரங்கள் கொடுக்கவும்)

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராகக் கப்படுதற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12-459—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

**கல்வி அமைச்சு**

*அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலான விரிவுரையாளர் I ஆந் தர பதவிகள்*

*கல்வி அமைச்சின் கீழுள்ள அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் பின்வரும் பாடங்களில் விரிவுரையாளர் I ஆந் தர பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

(அ) ஆங்கிலம்—சிங்கள, தமிழ் மொழிமூலம்.

(ஆ) கணிதம்—சிங்கள மொழிமூலம்.

(இ) இரசாயனவியல்—சிங்களமொழிமூலம்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, "செயலாளர், கல்வி அமைச்சு (ஆசிரியர் கலா சாலைகள் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவஞ்சல் மூலம் அனுப் பப்படவேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலான விரிவுரையாளர், I ஆந் தர பதவிகள்" என அடையாளமிடப்பட வேண்டும்.

2. *நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.*—(i) இப்பதவி கள் நிரந்தரமானவை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அரச சேவையில் உபகாரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை ஏற் கனவே வகிக்காவிடின் அரசாங்கசேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்தவேண்டும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் கள் (அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் உபகா ரச் சம்பள உரித்துடைய பதவி ஒன்றினை வகிப்பின் அவர்கள் உப காரச் சம்பள உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள். நியமதாரிகள் அரசசேவைக்குப் புதிய முறைப்படி நியமிக்கப்படு பவர்களாயின், அவர்கள், முதற்கண், மூன்று வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார்கள். அரசசேவையி லுள்ள நிரந்தர, உபகாரச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்படின் அவருடைய நியமனம் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை முறையில் அமையும்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் தீவிபத்திலுள்ள எவ்வாசிரியர் கலாசாலைக்கும் நியமிக்கப்படலாம்.

3. *சம்பளமும் படிகளும்.*—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—ரூ. 7,800—9 × 360—ரூ. 11,040.

4. *தேவைப்படும் தகைமைகள்.*—ஒவ்வோர் அபேட்சகரும் பின் வரும் தகைமைகளைப் பெற்றுள்ளாரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1974.1.4 அன்று 28 வய்துக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். (அரச சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது)

(இ) கல்வித் தகுதித் தேர்வுச் சான்றிதழ் பெற்ற பயிற்றப்பட்ட பட்டதாரியாகவும் அல்லது பட்டதாரியாகவும், பட்டம் பெற்றபின் ஆகக்குறைந்தது ஐந்து வருட கற்பித்தல் அனுபவம் பெற்றவராகவும் விண்ணப்பிக்கும் பாடத் துக்கு/பாடங்களுக்குப் பொருத்தமுடைய பின்வரும் தகைமைகளையும் பெற்றிருக்கவேண்டும் :—

(1) ஆங்கிலம்—ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு பட்டப் பரீட்சையில் சித்தி.

(2) கணிதம்—தூயகணிதத்தையும் பிரயோக கணிதத் தையும் பாடங்களாகக் கொண்டு பட்டப் பரீட்சை யில் சித்தி.

(3) இரசாயனவியல்—இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு பட்டப் பரீட்சையில் சித்தி.

(ஈ) அபேட்சகர்கள் சிங்கள/தமிழ் மொழியில் சிறந்த தகைமை கள் பெற்றிருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாத னங்கள் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு.கு.—ஞானஸ்நானப் பத்தி ரம் அல்லது உதவிநன்கொடைபெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்டக் கைந்நூல் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது.)

(ஆ) பட்ட அல்லது அதியுயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு; இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிட மிருந்து பெறப்பட்டதாக இருக்கவேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையும் தொழில்நுட்பத்தகைமையும்; உயர்தொழில் தகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த அதியுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :—(i) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளை யாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்ப லாகாது.

(ii) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக் கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக் கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப் பங்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை தொடர்பான கடிதங்களும் கல்வி அமைச்சின் செயலாளரின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டுமே யன்றி இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரின் சொந்த முக வரிக்குமல்ல.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்க ளுக்கு அமைபவையும் இவ்வர்த்தமானியின் I ஆம் II ஆம் பிரி வில் வெளியிடப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

பீ. உடகம,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடர்பு இல. ஆ. க./5/350,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு—2.
1973.12.5.

**விண்ணப்ப மாதிரிப் படிவம்**

*($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாள்களில் தயாரிக்கப்பட வேண்டியது)*

**கல்வி அமைச்சு**

*அரசினர் ஆசிரியர் கலாசாலைகளிலுள்ள விரிவுரையாளர் I ஆந் தர பதவி*

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) :
திரு./திருமதி/செல்வி :————.

2. முழுப்பெயர் :————.

3. உத்தியோக முகவரி :————.

4. சொந்த முகவரி :————.

(அ) இலங்கையரா ? :————.

(ஆ) அங்ஙனமாயின், வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா ? :————.

6. பிறந்த திகதி :— வரு. :————. மாதம் :————. நாள் :————.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி யன்றுள்ளபடி சரியான வயது :—
வரு. :————. மா. :————. நாள் :————.

8. தற்போதைய பதவி பற்றிய விபரங்கள் :

(அ) பதவி :————.

(ஆ) நிரந்தரமா தற்காலிகமா ? :————.

(இ) உபகாரச் சம்பள உரித்துடையதா அற்றதா :————.

(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? :————.

(உ) திணைக்களம் :————.

(ஊ) நிலையம்/வேலை இடம் :————.

(எ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டம் :————.

(ஏ) திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத்திட்டத்திலான தற்போதைய படி :————.

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் (சிங்கள மொழியிலான தேர்ச்சி/தமிழ் மொழியிலான சான்றிதழ்கள் உட்பட) :

| பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

10. உயர்தொழில்/தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| தாராதரப் பத்திரம் | வழங்கியதாபனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|

11. பொது கல்வி கற்ற நிலையங்கள்:—

| நிலையம் | வகுப்பு | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |

12. உயர் தொழில் கல்வி கற்ற நிலையங்கள் :—

| நிலையம் | பின்பற்றிய பயிற்சி நெறி | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |

13. முன்னைய நியமனங்கள் (காலவரன் ஒழுங்கில் சுருக்கமாகக் கொடுபட வேண்டியது) :—

| திணைக்களம் வேலை இடம் | நியமம்/னதா | பதவி நிரந்தரமா தற்காலிகமானதா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |

14. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக யாதேனும் குற்றத்தீர்ப்பு உம்மீது அளிக்கப்பட்டதா? (அங்ஙனமாயின், விபரங்களைக் கொடுக்கவும்) :————.

15. விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவரா? (அங்ஙனமாயின், விபரங்கள் கொடுக்கவும்) :——.

16. விண்ணப்பதாரி பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு? :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக்காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்திற்கும் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12-458—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## நெல் சந்தைப்படுத்தல் சபை

### சிவில் எஞ்ஜினியர் பதவி—தரம் II

மேற்குறிப்பிட்டுள்ள பதவிக்கு, பின்வரும் தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்கள், கீழே கையொப்பமிட்டவரின் முகவரிக்கு, கல்விச்சான்றிதழ், பிறப்புப் பதிவுச் சான்றிதழ், குணச்சான்றிதழ்களின் பிரதிகளுடன் 31.12.1973 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சிவில் எஞ்ஜினியர் பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

1. தகைமைகள்.—சிவில் எஞ்ஜினியராக, பொறுப்பான பதவிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றிய அனுபவத்துடன், சிவில் எஞ்ஜினியர் இயல் பகுதியில் பூரண தொழிற் தகைமைத் திறன் பெற்றிருத்தல் வேண்டும். அபேட்சகர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாத நிர்வாக அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். மீள வலியுறுத்திய கொங்கிறீட் நிர்மாண வேலைகளில், வரைதல், நிர்மாண அமைப்பு, ஆகியவைகளில் அனுபவம் பெற்றிருப்பவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

2. சம்பளத்திட்டம்—ரூபா 1,500—10×50—ரூபா 2,000 தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு அவருடைய தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்ப சம்பளத் திட்டத்தின் ஒரு படியில் வழங்கப்படலாம்.

3. வயது.—விண்ணப்பத் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்க இலாகாக்களில் கடமை பார்க்கும் ஊழியர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாட்டின் மேல் எல்லை அமையாது.

4. பொது நியதிகள் :—

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டும் இப்போதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(இ) சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்க இலாகாக்களில் உள்ள ஊழியர்களிடமிருந்துவரும் விண்ணப்பங்கள் முறையே அவர்கள் கடமைபுரியும் அலுவலகத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இல. 5, எலிபாங்கு வீதி,
கொழும்பு 5,
1973.11.19.

தலைவர்,
நெல் சந்தைப்படுத்தல் சபை.

12-430—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

---

## நெல் சந்தைப்படுத்தல் சபை

### பதவி வெற்றிடம்

### உதவி களஞ்சிய அதிகாரி பதவி—தரம் V

மேற் குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கல்விச் சான்றிதழ், குணச்சான்றிதழ், பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ஆகிய சாதனங்களின் பிரதிகளுடன், பதிவுத்தபால் மூலம், பரிபாலன முகாமையாளர், நெல் சந்தைப்படுத்தல் சபை இல. 5 எலிபாங்கு வீதி, கொழும்பு 5 என விலாசமிடப்பட்டு 1973 ம் ஆண்டு டிசம்பர் 31 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடது புற மேல் மூலையில் "உதவி களஞ்சிய அதிகாரி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

1. தகைமைகள்.—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் விவசாயவியலில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

2. சம்பளம்.—ரூபா 630—6 × 20—6 × 25—ரூபா 900 மாதாந்தம் எல்லாம் தட்பட.

3. வயது.—விண்ணப்ப முடிவு திகதி அன்று 22 வயதுக்கு குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவை அல்லது கூட்டுத்தாபனங்களில் கடமைபுரியும் விண்ணப்பதாரர்களுக்கு இவ் வயதுக் கட்டுப்பாடு அமையாது.

4. பொது நிபந்தனைகள்.—(அ) இலங்கை வாசியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் 1956 இன் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படுதல் வேண்டும்.

(இ) அரசாங்க திணைக்களங்களை அல்லது கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

இல. 5, எலிபாங்கு வீதி,
கொழும்பு 5.

பரிபாலன முகாமையாளர்,
நெல் சந்தைப்படுத்தல் சபை.

12-431—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

### வரைவு பயிலுநர் பதவிகள்

அஞ்சல் தொலைத்தொடர்பு திணைக்களத்தின் தொலைத்தொடர்பு எந்திரவியற் கிளையிலுள்ள வரைவுநர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள அதே மாதிரியான படிவத்தில் விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் தயாரித்து, 31.12.1973 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ, பிரதான தொலைத்தொடர்பு எந்திரி, 5 வது மாடி, அ. தொ. தலைமையகக் கட்டடம், லோட்டஸ் வீதி, கொழும்பு 1, எனும் முகவரியை அடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

2. **வேதன அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் ரூபா 3,000—1 × 90—3,090 ரூபாவாகும். (இவ்வேதனளவுத் திட்டம் 01.10.1969 க்கு முன்னர் நிலவிய வேதனமான ரூபா 960—1 × 72—1,032 க்கு ஒத்ததாகவிருக்கும் உத்தேசமானதிட்டம்).

3. **ஆட்சேர்ப்பு முறை.**—இதற்கென நியமிக்கப்படும் தெரிவுச் சபையினால் தகவுத்திறனுடைய அபேட்சகர்கள் பரிசோதிக்கப்படுவர்.

4. **நியமன நியதிகள்.**—(அ) இப்பதவிகள் தற்காலிகமானவையாகும். அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்கு தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் உதவுதொகை அளிக்க வேண்டப்படுவர்.

(ஆ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு திணைக்களத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.

(இ) செய்முறைப் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவரும் குறிப்பிடப்பட்ட திணைக்களப் பரீட்சைகளில் சித்தியெய்தியவருமான அபேட்சகர்கள் வகுப்பு II வரைஞர்களான நிரந்தர நியமனத்திற்கு தகவுடையவராவர்.

(ஈ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் வெளியகக் கடமைகளும் ஆற்ற வேண்டப்படுவர்.

(உ) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பிறவற்றுடன் விதிக்கப்பட்ட பயிற்சி நெறிகளை பணிவாகவும் நுட்பமாகவும் கற்போமென்றும், வகுப்பு II பயிற்சி பூர்த்திகரமானதும் ஐந்து ஆண்டு காலத்திற்குக் குறையாததுமான கால வெல்லைவரை திணைக்களத்தில் சேவை செய்வேனென்றும் திணைக்களத்துடன் ஓர் உடன்படிக்கை செய்தல் வேண்டும். மேற்கூறிய நியதிகள், நிபந்தனைகள் ஆகியனவற்றைச் செவ்வனே பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துமுகமாக, பயிற்சியாளரும் அவர்களது பெற்றோரும் அல்லது பாதுகாவலரும் 5,000/- ரூபா கொண்ட ஓர் முறியில் இரு பிணை நிற்போருடன் சேருதல் வேண்டும்.

5. **வேண்டப்படும் தகைமைகள்.**—(1) விண்ணப்பதாரிகள் 31.12.1973 இல் 18 வயதிற்குக் குறையாதவராகவும் 24 வயதிற்கு மேற்படாதவராகவும் மிருத்தல் வேண்டும்.

(2) (அ) கணிதத்தை ஓர் பாடமாக எடுத்து சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) இருதடவைகளுக்கு மேற்படாது கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட க.பொ.த. பத்திரப் பரீட்சையில் (சாதாரணதர) சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் தகைமைகளில் ஏதேனும் ஒன்றைப்பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) பயில்நிலை வரைஞர் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) கட்டட அமைப்பு முழுநேரப் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சையில் அல்லது மாலை நேரப் பயிற்சி நெறியின் பாகங்கள் I, II, III இல் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான இரண்டாண்டு பயிற்சிநெறியில் சித்தியெய்தி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ் (மு.கு. சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.)

(ஆ) மூன்று குணச் சான்றிதழ்கள் (அபேட்சகர் கடைசியாகக் கல்வி கற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழக அதிபரின் சான்றிதழ், இவற்றுள் ஒன்றாகவிருத்தல் வேண்டும்).

(இ) உயர்தொழில் அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் கொண்ட சான்றிதழ்கள்.

(ஈ) கல்விச் சான்றிதழ்கள்.

7. அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சட்ட முறையான சபைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியனவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள், தாம் தெரிவு செய்யப்படின், குறுகிய கால அறிவித்தலில் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவாரென தாம் பணிபுரியும் திணைக்களத் தலைவர், கூட்டுத் தாபனத்தலைவர், சபைத் தலைவர் அத்தாட்சிப்படுத்துவதன் பேரிலேயே இவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

8. விண்ணணப்பங்கள் அல்லது இது தொடர்பான பிற கடிதத் தொடர்புகள் யாவும் இத்திணைக்களத்தைச் சார்ந்த எந்தவொரு உத்தியோகத்தரின் பெயருக்கு அனுப்பாது பிரதான தொலைத் தொடர்பு எந்திரி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமையகம், 5 வது மாடி, கொழும்பு 1, எனும் முகவரிக்கே அனுப்பப்படல் வேண்டும்.

9. அரசாங்கச் சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

ஏச். டி. எஸ். ஏ. குணவர்த்தன,
பிரதான தொலைத்தொடர்பு எந்திரி.

பி. தொ. எ. அலுவலகம்,
5 வது மாடி,
அ. தொ. தலைமையகக் கட்டடம்,
கொழும்பு 1.
30 நவம்பர் 1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :————.
(தனி எழுத்துக்களில்)
(அ) சொந்தப் பெயர் :————.
(ஆ) பிற பெயர்கள் :————.

2. அஞ்சல் முகவரி ;————.

3. பிறந்த திகதி :————.
(சான்றிதழின் பிரதி இணைத்தல் வேண்டும்)
31.12.1973 ல் உண்மையான வயது :—
வருடம் :————. மாதங்கள் :————. நாட்கள் :————

4. இலங்கையரா :————.
அங்ஙனமாயின்
(அ) வம்சாவழி காரணமாகவா :————.
அல்லது
(ஆ) பதிவு காரணமாகவா :————.

5. திருமணமானவரா அல்லது தனிப்பட்டவரா :————.

6. கல்வித் தகைமைகள் :————.
(பிரதிகள் இணைத்தல் வேண்டும்)

7. உயர்தொழிற்றகைமைகளும் தொழிநுட்பத் தகைமைகளும் :————.
(பிரதிகள் இணைத்தல் வேண்டும்)

8. கல்லூரியை விட்டு விலகியபின் பார்த்த தொழில் :————.

9. குணச் சான்றிதழ்கள் அளித்தவர்களின் பெயர்கள் முகவரிகள் :————.

10. விசேட கோரிக்கைகள் இருப்பின் அவற்றின் விவரங்கள் :————.

இவ் விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப் படுவதற்கும் நியமனத்துக்குப் பின்னராயின் எவ்வித நட்ட ஈடுமின்றி விலக்கப்படுவதற்குப் பாத்திரனாவேனென்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

12-438—14.12.73 ந் தேதிய வர்த்தமானி இல. 90

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

*அரபு ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்தற்கான தெரிவு*

தமிழ் மொழி மூலம் அரபு ஆசிரியர்களைப் பயிற்றுதற்கானதொரு பயிற்சி நெறி, இரு வருடகால நிலையப் பயிற்சி நெறியாக அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் நடாத்தப்படும்.

அரபு மொழியையும் இணைந்த பாடங்களையும் ஆரம்ப பாடசாலைகளிலும் இடைநிலைப் பாடசாலைகளிலும் கற்பித்தற்கான ஆசிரியர்களைப் பயிற்றுதலே இப்பயிற்சி நெறியின் நோக்கமாகும்.

பொது ஒழுக்கத்திலும் படிப்பிலும் ஊக்கத்திலும் ஆசிரியர் கலாசாலை அதிபருக்குத் திருப்தி அளிக்கத் தவறும் பயிற்சியாளர் ஒருவர் பயிற்சி நெறியிலிருந்து விலக்கப்படுவார். இவ்விடயம் பற்றி மகாவித்தியாதிபதியின் முடிவு இறுதியானதாகும்.

பயிற்சியாளர் ஒருவர் பயிற்சி நெறிக் காலத்தில் வேறுயாதேனும் வெளிப்பயிற்சி நெறி ஒன்றினைப் பின்பற்றுதற்கேனும் வெளிப்பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதற்கேனும் சாதாரணமாக அனுமதிக்கப்படமாட்டார்.

**2.** (i) பின்வரும் வகுதிகளிலடங்கும் பரீட்சார்த்திகள் இப்பயிற்சி நெறிக்குச் சேர்க்கப்படமாட்டார்கள். அத்தகைய பரீட்சார்த்தி ஒருவர் அனுமதி பெறுமிடத்து பயிற்சிக் காலத்தில் எந்நேரத்திலேனும் பயிற்சிக் கால முடிவிலேனும் அவரது அனுமதி செல்லுபடியற்றதாக்கப்படும்.

(அ) ஆசிரியர் கலாசாலை ஒன்றில் எற்கனவே யாதேனும் பயிற்சி பெற்றுள்ளவர்கள் அல்லது தற்போது பயிற்சி பெறுபவர்கள்.

(ஆ) பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்கள்.

(இ) கீழ்க்காணும் 4 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள தகவுத் திறன் நிபந்தனைகள் எல்லாவற்றையும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியன்று திருப்தி செய்யாதவர்கள்.

(ii) பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர் பெறக்கூடிய சம்பளம், சகாயப்படிகள், பயிற்சிக்கான செலவு ஆகியவற்றின் மொத்தத் தொகைக்குச் சமனான பெறுமதிக்கு ஓர் உடன்படிக்கையைச் செய்து கொள்தற்கு வேண்டிய சாதனங்களை அனுமதிக்கப்படும் இரு வார காலத்துள் அதிபரிடம் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் சமர்ப்பிக்க வேண்டும். மேலும்,—

(அ) பயிற்சிக் காலத்தில் அரசியல் சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடமாட்டாரெனவும்,

(ஆ) எக் காரணத்தையிட்டும் பயிற்சி நெறியைக் கைவிடமாட்டாரெனவும்,

(இ) பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் மகாவித்தியாதிபதியால் நியமிக்கப்படும் பாடசாலைகளில் தொடர்ச்சியாக 8 வருட காலத்துக்குச் சேவை புரிவாரெனவும்,

(ஈ) உடன்படிக்கையின் குறிப்பிடப்படும் சேவைக் காலத்தையும் உடன்பாடுகளையும் முற்றுகப் பூர்த்தி செய்யும் வரை திணைக்களத்துக்கு வெளியே எழும் எப்பதவிக்கும் படிப்பு லீவாக மேலதிக காலத்துக்கும் விண்ணப்பிக்க மாட்டாரெனவும்,

குறித்த உடன்படிக்கை மூலம் உறுதி அளிக்க வேண்டும்.

**3. சம்பளம்.**—பயிற்சி நெறியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்து ஆசிரியர்களாக நியமனம் பெறும் பயிற்சியாளர்கள், புதிய நியமனத் திகதியன்று அவர்களுக்கு அமையும் சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தப்படுவார்கள்.

**4. தகவுத் திறன்.**—(i) பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க்காணும் தேவைகளைத் திருப்தி செய்ய வேண்டும் :—

(i) நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்கு முன்னர் ஆசிரியராக நியமனம் பெற்றிருக்க வேண்டும். எனினும் தெரிவு சேவை முதுமை அடிப்படையிலே நடைபெறும்.

(iv) 1.1.74 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

(ii) பின்வரும் தகைமைகளைப் பெற்றிராத எப்பரீட்சார்த்தியும் தமிழ் மொழி மூலம் நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுதற்கு உரித்துடையராகார்.

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் அல்-ஆலிம் ஆரம்ப பரீட்சையின் I ஆம், II ஆம் பகுதிகளில் சித்தி **அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு மத்றசாவால் வழங்கப்படும் இறுதிச் சான்றிதழ்.

இந்நோக்கத்தின் பொருட்டுப் பின்வருவன அங்கீகரிக்கப்பட்ட மத்றசாக்களாகும் :—

1. பஹ்யதுல் இப்ராஹிமிய அரபுக் கல்லூரி, கோட்டை, காலி.
2. கபூரியா அரபுக் கல்லூரி, மஹரகம.
3. மத்றஸ்துல் பாறி அரபுக் கல்லூரி, வெலிகம.
4. காஸிமியா அரபுக் கல்லூரி, புத்தளம்.
5. நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்.
6. கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை.
7. மத்றஸ்துல் பலாஹ் அரபுக் கல்லூரி, காத்தான்குடி.
8. முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல்எலிய.
9. மத்றஸ்துல் ஜிப்ரியா அரபுக் கல்லூரி, காலி.
10. ஹியாதீயா அரபுக் கல்லூரி, பழைய நகரம், மாதம்பை.
11. நத்வதுல் புகாரி அரபுக் கல்லூரி, கின்னியா.
12. மத்றஸ்துல் நூருனியா கொற்றுவெகொட, மாத்தறை.

**5. தெரிவுக்கான விண்ணப்பம்.**—(1) இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவம் ஒன்று பரீட்சார்த்தியால் தயாரிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பஞ் செய்யப்பட வேண்டும். தமிழ் மொழி மூலமே விண்ணப்பஞ் செய்யப்பட வேண்டும். அச்சிடப்பட்ட படிவங்கள் கல்வி அமைச்சினுல் வழங்கப்படமாட்டா.

பிரவேசப் படிவம் தயாரிக்கப்படும் விடயத்தில் பின்வரும் தேவைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படவேண்டும். இவற்றைக் கவனிக்கத் தவறின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் :—

(அ) விண்ணப்பப் படிவம் 16″ × 13″ அளவு முழுத்தாளில் தயாரிக்கப்படவேண்டும் ; வேறு எவ்வித கடுதாசியிலும் அல்ல.

(ஆ) படிவம் தட்டச்சுப் பொறியில் தயாரிக்கப்படலாம். படிவம் கையெழுத்தில் தயாரிக்கப்படின் கோடுகள் யாவும் சிவத்த மையிலும் பதிவுகள் யாவும் நீல அல்லது கறுத்த மையிலும் அமைய வேண்டும்.

(இ) கூடுகள் யாவும் கோடிடப்படுவதுடன் மாதிரிப் படிவத்திலுள்ள ஒழுங்கின் பிரகாரம் உரிய பக்கத்தில் வரையப்பட வேண்டும். எக்கூடும் மாற்றியமைக்கப்படவேனும் விடப்படவேனும் ஆகாது. கூடுகளை விவேகமான முறையில் இடைவெளிப்படுத்துவதுடன் அவை மிக நெருக்கமாக அமைதல் தவிர்க்கப்படவேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் பூரணமாகவும் செம்மையாகவும் பரீட்சார்த்தியால் நிரப்பப்பட வேண்டும். பூரணமாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவம் ஒன்று அங்கு கொடுபட்டுள்ள விபரங்களின் சிறப்புக்கமையச் சீர்தூக்கப்பட்டு நிராகரிக்கப்படக்கூடும்.

பின்வரும் விடயங்களுக்குப் பரீட்சார்த்தியின் கவனம் கோரப்படுகிறது :—

(அ) ஆசிரியர் ஒருவர் தனது பெயரை, திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி கொடுக்கவேண்டும்.

(ஆ) ஆசிரியர் ஒவ்வொருவரும், தான் ஒரு மௌலவி ஆசிரியரா எனக் குறிப்பிடுவதுடன் முதல் நியமனத் திகதியையும் பதிவிலக்கத்தையும் கொடுக்கவேண்டும்.

(இ) விண்ணப்பதாரி ஆசிரியராகவுள்ள பாடசாலைத் தலைவர் மூலம் விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும்.

(ஈ) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம், பின்வரும் சொற்கள் தெளிவாக இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்ட காகித உறையில் வைக்கப்பட்டு அனுப்பப்படவேண்டும்.

"அரபு ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி (தமிழ்)"

(உ) விண்ணப்பம் 1973.12.31 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகக் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படவேண்டும்.

"கல்விப் பணிப்பாளர்,
ஆசிரியர் கல்வி,
கல்வி அமைச்சு,
கொழும்பு 2."

(3) விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(4) சாதனங்கள் ஒன்றும் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படலாகாது.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு திசெம்பர் மீ 5 ந் உ.

பீ. உடகம,
மகா வித்தியாதிபதி.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அரபு ஆசிரியர்களாகப் பயிற்சி அளித்தற்கு நடைபெறும் தெரிவுக்கான விண்ணப்பம்—1974

1. பால் (எதிரேயுள்ள கூடுகளுள் உரிய கூட்டில் √ என அடையாளமிடுக) : ஆண் ☐ பெண் ☐
2. (i) முழுப் பெயர் (சொந்தப் பெயர் முதல்) :————.
   (ii) முதலெழுத்துக்களுடன் சொந்தப் பெயர் :————.
3. நியமனத் திகதி :————.
4. ஆசிரியராகப் பதிவிலக்கம் :————.
5. விலாசம் :—
   பாடசாலை :————.
   விலாசம் :————.
   வகை : அரசினர்/தனிப்பட்ட கட்டணம் அறவிடும்/தனிப்பட்ட கட்டணம் அறவிடாத/அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட/தோட்ட :————.
   மாவட்டம் :————.
   தேர்தல் தொகுதி :————.
6. நிரந்தர விலாசம் :————.
   மாவட்டம் :————.
   தேர்தல் தொகுதி :————.
7. பிறப்பு :—
   பிறந்த திகதி :————.
   பிறந்த மாவட்டம் :————.
8. வயது : (74.1.1 அன்றுள்ளபடி) :—
   வருடம் :————, மாதம் :————, நாள் :————.
9. உமது வயது அமையும் கூட்டில் √ என அடையாளமிடுக :—

| 18—23 | 23—28 | 28—32 | 32—40 | 40—45 |
|---|---|---|---|---|
| ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

10. சித்தி எய்திய அரபுப் பரீட்சை விபரங்கள் :—

| பரீட்சைப் பெயர் | தராதரப் பத்திர இலக்கமும் வழங்கிய தாபனத்தின் பெயரும் | திகதி | சித்தி எய்திய பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

11. க. பொ. த. பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகள் :—

| பரீட்சை | வருடமும் மாதமும் | தராதரப் பத்திர இலக்கம் | பாடங்களின் பெயர்களும் சித்தித் தரங்களும் | விசேட சித்திகளின் எண்ணிக்கை | திறமைச் சித்திகளின் எண்ணிக்கை | சாதாரண சித்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| க. பொ. த. (சா. த.) | | | சித்தித் தரம் | | | |
| க. பொ. த. (உயர்தர) | | | சித்தித் தரம் | | | |

* சாதாரண சித்தியை "சி" எனவும், திறமைச் சித்தியை "தி" எனவும், விசேட சித்தியை "வி" எனவும் குறிப்பிடுக.

12. சேவை விபரங்கள் :—

| பாடசாலைப் பெயர் | விலாசம் | மாவட்டம் | நியமனத் திகதி | மாற்றத் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

13. பிற முயற்சிகள் :—

(அ) விளையாட்டுகள் :————.

(ஆ) சங்கங்கள் :————.

(இ) சமூக வேலை :————.

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை :—

இவ்விண்ணப்பப் படிவத்தில் கொடுபட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென இத்தால் அத்தாட்சிப்படுத்துவதுடன் வேண்டப்படு மிடத்து அவற்றை நிரூபித்தற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

15. பாடசாலை தலைவர்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்தல் :—

மேற்குறித்த விண்ணப்பதாரி :

(i) எனது பாடசாலையில் ஓர் உதவி ஆசிரியராக/தலைமை ஆசிரியராக இருக்கிருர்.

(ii) அவருடைய வேலை ................ தொடக்கம் ................ வரை திருப்திகரமானது.

(iii) தராதரப் பத்திரம் பெற்ற/தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்.

(iv) எனது முன்னிலையில் இப்படிவத்தில் கையொப்பமிட்டுள்ளார், என்பனவற்றை இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

..................................................
பாடசாலைத் தலைவரின்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :————.

பாடசாலைத் தலைவரின்/வட்டாரக் கல்வி உத்தியோகத்தரின் பெயரும் உத்தியோகப் பெயரும் :————.

உத்தியோக விலாசம் :————.

குறிப்பு.—படிவத்தில் பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

12-411—14.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 90

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்ட என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| டிசெம்பர் | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5 12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12 12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்.
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண் ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது